எம்.சி.ஓ.பி. எண்: 634/2016 மற்றும் 5352/2018 (Joint Trial) தேதி : 7.2.2024
ம.சா. : 1
பெயர் : திருமதி. புஷ்பராணி
க/பெ. : லேட் திரு. மணிகண்டன்
வயது : 31

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

இறந்த விட்ட நபரின் உடல் சடல கூறாய்வு செய்யப்பட்டபோது மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று சொன்னால் அது தவறு, நான் சென்றிருந்தேன். காவல் துறை அதிகாரிகளும் அங்கிருந்தார்கள். அவர்கள் இறந்த நபரின் உடல் குறித்து உங்களிடம் விசாரிக்கவில்லை. மேலும், பஞ்சாய்த்தாரகள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் இறந்த உடலை குறித்த பிரேத விசாரணை மேற்கொண்டு தயாரித்த அறிக்கையில் இறந்த நபரான திரு. மணிகண்டன் என்பவர் திருமணமாகாதவர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்த நபர் உடல் அடக்கம் செய்யப்பட்ட காசிமேடு இந்து மயானத்தில் கொடுக்கப்பட்ட அறிக்கையின்படியும் இறந்து விட்ட மணிகண்டன் திருமணமாகாதவர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது, அவரின் உறவினர் திரு. சிவசங்கர் என்பவர் தான் இறந்த நபரின் உடலைப் பெற்று நல்லடக்கம் செய்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையில் நீங்கள் இறந்த திரு. மணிகண்டனின் மனைவி என்பது தெரிய வந்திருந்தால் இந்த விபத்து குறித்து விசாரணை மேற்கொண்ட காவல் துறை அதிகாரிகள் வழக்கின் இறுதி அறிக்கை தாக்கல் செய்கையில் திரு. மணிகண்டனின் மனைவி நீங்கள் தான் என்பதை பெயர் குறித்து தாக்கல் செய்திருப்பார்கள். அவ்வாறு எந்த குறிப்பும் இல்லை என்பதால் நீங்கள் அவரின் மனைவி என சொல்லுவது எற்க்கத்தக்க சாட்சியம் அல்ல என்றால் சரியல்ல. குற்றயிறுதி அறிக்கையில் உங்கள் பெயர் சாட்சியப் பட்டியலின் வரிசையில் எத்தனையாவது சாட்சி என்பதை குறிப்பிடப்படாமல் இடைச்செறுகளாக உங்களது பெயர் இணைக்கப்பட்டு கணவரை அடையாளம் காட்டியவர் என்று சேர்க்கப்பட்டுள்ளதால் நீங்கள் இறந்து விட்ட நபரின் மனைவி என்ற நிலையில் எவ்வித உரிமையும் இந்த வழக்கைப் பொறுத்து கோர முடியாது, உண்மையில் நீங்கள் இறந்த நபரின் மனைவி உடலை அடையாளம் காட்டியது விசாரணையின் அதிகாரி ஏற்றுக்கொண்டிருந்தால் இறந்த நபரின் சடல கூறாய்வுமற்றும் பிரேத விசாரணை அறிக்கையை தயார் செய்த போதே உங்களை இறந்தவரின் மனைவி என்ற இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும், அவ்வாறில்லாமல் இறுதியாக குற்றியிறுதி அறிக்கையை தாக்கல் செய்கையில் உங்கள் பெயர் சாட்சி பட்டியலில் இணைக்கப்பட்டிருந்தால் அதன் நம்பகத்தன்மை குறித்து புலன் விசாரணை சாட்சியம் அளித்தால் தான் அதனை ஏற்க்க முடியும் என்று சொன்னால் அதை விசாரிக்க தயாராக இருக்கிறேன்.

சென்னை மாநகராட்சி அலுவலகத்தால் வழங்கப்பட்ட இறந்தவரின் இறப்புச்சான்றை மசாஆ 2–ஆக தாக்கல் செய்துள்ளீர்கள் அதிலும் உங்கள் பெயர் அவரின் மனைவி என்று இடம் பெறவில்லை என்றால் சரிதான். இறந்த விட்ட திரு. மணிகண்டன் என்பவருடன் திருமணம் செய்து கொண்டீர்கள் என்பதற்கான திருமண பத்திரிக்கையோ, திருமண மாலை மாற்றி கொண்டதற்கான புகைப்படமோ, திருமண நிகழ்வுகளில் மேற்கொள்ளப்பட்ட இந்து முறைப்படியான சம்பிரதாயங்கள் செய்யப்பட்டதற்கான புகைப்படங்களோ ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்த நபரின் பிரேத விசாணை அறிக்கையை (Imquest) ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்கள் பிரமாணவாக்குமூல சாட்சியத்தில் பிரேத பரிசோதனை அறிக்கையை மசாஆ 3–என குறிப்பிட்டுள்ளீர்கள் அது உடல் கூறாய்வு அறிக்கை தான், நீங்கள் சொல்லுவது போன்றான அறிக்கை அல்ல என்றால் சரியல்ல. மசாஆ 4–ஆக தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கு அடிப்படையான புகரோ, எதற்காக காவல் நிலையத்தில் அத்தகைய உடன்படிக்கை எழுதப்பட்டுள்ளது என்பதற்கான முகாந்திரம் குறித்த ஆவணங்கள் எதையும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மசாஆ 4–ன் படியே உங்களுக்கும், மணிகண்டனுக்கும் கருத்து வேறுபாடு இருந்ததாகத்தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மசாஆ 4–ல் எழுதப்பட்டுள்ள வாசகங்களில் இருந்தே அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள அடித்தல், திருத்தல்களை காண்கையில் உங்களால் வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்பது மிகத்தெளிவாக தெரிய வருகிறது என்றால் சரியல்ல. மசாஆ 4–ஐ எழுதிக்கொடுத்த மறுநாளான 7.10.2015 அன்றே பதிவுத் திருமணம் செய்து கொண்டதாக சான்றை மசாஆ 5–ஆக தாக்கல் செய்துள்ளீர்கள் என்பதை காண்கையில் அந்தச்சான்றும் மகளிர் காவலர்களின் வர்புறுத்தலின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதால் அந்த பதிவுச்சான்றைப் பொறுத்தும் அதனை வழங்கிய அதிகாரியை அழைத்து விசாரித்து திருமணத்தை நிரூபிக்க வேண்டிய கடமை உள்ளது, அவ்வாறு நிரூபிக்காத நிலையில் அந்த ஆவணத்தை உங்களின் திருமணம் பதிவு செய்யப்பட்ட திருமணம் என சொல்லும் சாட்சியம் ஏற்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எனது திருமணத்தை பல்லாவரம் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை. பீட்ச் பதிவுத்துறை அலுவலத்தில் பதிவு செய்தேன். மசாஆ 4–ஆன சான்றான திருமண பதிவுச்சான்று பல்லாவரம் என குறிப்பிட்டிருப்பது தவறு தான். எங்கள் திருமணத்தை உறுதி செய்யும் ஆவணம் எதையும் இந்த விபத்து வழக்கை விசாரணை செய்த காவல் துறை அதிகாரியிடம் கொடுக்கவில்லை. நான் மசாஆ 4–ஆன ஆவணத்திற்கு முன்பே உங்கள் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள், பிரச்சனைகள் இருந்து வந்துள்ளதா என்றால் அப்படி எல்லாம் எதுவும் இல்லை. உங்கள் திருமணம் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் முறைப்படியான திருமணம் ஏதும் நடைபெற்றதாக என்றால் ஆமாம், தாம்பரத்திலுள்ள அம்மன் கோவில் ஒன்று, கோவில் பெயர் நியாபகம் இல்லை. அவரது மாமா, மணிகண்டனின் சித்தி பையன் பாலாஜி ஆகியோர்

முன்னிலையில் திருமணம் செய்து கொண்டோம், அதற்கான திருமணச்சான்றை கோவில் நிறுவனத்திடம் பெற்றீர்களா என்றால் ஆமாம், அதனை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. அந்த கோவிலில் கொடுக்கப்பட்ட திருமண ரசீதை திருமணத்தை பதிவு செய்த பதிவாளரிடம் கொடுத்து தான் திருமணம் பதிவு செய்ய முடியும், அவ்வாறு கொடுத்தீர்களா என்றால் அது எனக்கு நியாபகம் இல்லை. அதன் பிறகு சென்னையில் எந்த கோவிலிலும் திருமணம் செய்து கொள்ளவில்லை. மசாஆ 5–ஆன திருமண பதிவுச்சான்றில் குறிப்பிட்டுள்ள சரத்துகளின் படி உங்கள் இருவருக்கும் 7.10.2012 அன்று அருள் மிகு தண்டு துளுக்காநத்தம்மன் ஆலயம், சாலை விநாயகர் கோவில் தெரு, முத்தையாள் பேட்டை, சென்னை – 01 என்ற விலாசத்தில் திருமணம் நடந்ததாகவும் அந்த திருமணத்தை அங்கிகரித்து தான் பதிவாளர் உங்கள் திருமணத்தை பதிவு செய்து மசாஆ 5–ஐ வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் மேற்சொன்ன கோயிலில் உங்கள் திருமணம் நடந்தது என்பதற்கான ஆவண ஆதாரம் எதையும் இம்மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் திருமணத்தை மசாஆ 5–ஐ மணிகண்டன் ஒருவரின் மூலம் ஏற்பாடு செய்து பதிவு செய்தார். மசாஆ 5–ல் குறிப்பிடப்பட்டுள்ள கோயில் என்பது திருமணங்கள் குடும்ப உறப்பினர்கள் முன்னிலையில் நடைபெறாமல் திருமணம் நடந்ததாக சான்றுகளை தயார் செய்து கொடுப்பதாக பெயரிடப்பட்டு இயங்கி வரும் கோவில் தான் அந்த கோவில் பெரும்பாலான முறையற்ற பதிவு திருமணங்கள் இந்த கோவிலில் பெற்று வரப்படும் சான்றின் அடிப்படையில் செய்யப்பட்டதாகவும், அத்தகை சான்றின் அடிப்படையில் பதிவு செய்யப்டபடும் திருமணங்கள் ஏற்க்கத்தக்கதல்ல என்று பல நீதிமன்ற தீர்ப்புகள் சென்னையிலுள்ள நீதிமன்றங்களால் வழங்ப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஏற்கனவே நீங்கள் சாட்சியம் அளித்துள்ளப்படி பதிவுச்சான்றில் குறிப்பிட்டுள்ள கோவிலில் திருமணம் நடை பெறவில்லை என்பதை நீங்களே ஒப்புக்கொள்வதாலும், உங்கள் திருமணம் தாம்பரத்திலுள்ள அம்மன் கோவில் ஒன்றில் நடை பெற்றுள்ளதாலும், நீங்கள் தாக்கல் செய்துள்ள மசாஆ 5 வழக்கிற்காக உருவாக்கப்பட்டு பெறப்பட்டுள்ளவை என்று சொன்னால் சரியல்ல. இந்நிலையில் சாட்சியின் சாட்சியம் மேலும் தொடர வேண்டி இரு தரப்பு வழக்கறிஞர்களின் விருப்பப்படி 2.3.2024 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>மறுவிசாரணை இல்லை</u>

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.